பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 03 செவ்வாய்க்கிழமை 19.07.2022 கதிர் 256

## இனி இது ரகசியம் அல்ல!

இன்று ஓர் ஒப்பீடு செய்வது தவிர்க்க முடியாதது. யாரை யாருடன் ஒப்பிடுகின்றீர்கள், ஒப்பீட்டுக்கு ஒரு விவத்தை கிடையாதா என்று நீங்கள் என்னைத் திட்டினாலும் வேறு வழி இல்லை. அதைச் செய்யத்தான் வேண்டும். அதற்கு முன் ஒரு ☞2

# ரணிலும் சஜித்தும் சம்பந்தனிடம் ஆதரவு கோரி நீண்ட நேரம் பேச்சு

## இன்று மாலையே கூட்டமைப்பு இறுதி முடிவு



புதிய ஜனாதிபதிக்கான தெரிவில் தங்களுக்கு ஆதரவு கோரி பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நாடியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை, பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட வகையில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நீண்ட நேரம் பேசி கூட்டமைப்பின் ஆதரவு கேட்டார் என்று நேற்று மாலை நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அதன் தலைவர் சம்பந்தன் பகிரங்கமாக அறிவித்தார். ☞2

## வாக்கெடுப்பை புறக்கணிக்கும் முன்னணியினர்



நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தெரிவில், தமிழ் ☞2

## ‘ஆவா’ மீது வாள்வெட்டு

### 5 பேர் கைது

ஆவா என்று அழைக்கப்படும் வினோதன் என்ற வன்முறைக் கும்பலின் தலைவர் மீது வாள்வெட்டுத் ☞03

## ஒருபோதும் போராட்டத்துக்கு துரோகமிழைக்கவேமாட்டேன்

### ஏற்பாட்டுக் குழுவினரிடம் சஜித் உறுதி



போராட்டத்துக்குத் தான் ஒருபோதும் துரோக மிழைக்கவில்லை எனவும், எதிர்காலத்திலும் அந்நிலைப்பாடு ☞2

### நாடாளுமன்றத்தைச் சூழ பொலிஸ், இராணுவம் குவிப்பு

## இன்று வேட்புமனு; நாளை வாக்கெடுப்பு ஆதரவைத் திரட்டும் பேச்சுகள் மும்முரம்



இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வேட்புமனுத்தாக்கல், வாக்கெடுப்பு என்பன இன்றும், நாளையும் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள நிலையில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முதல் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் செல்வதற்கான பிரதான நுழைவாயில்களில் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். படையினரும் ☞03

## சுதந்திரக் கட்சியின் தீர்மானம் மாறுமா?

### இன்று கூடுகின்றது மத்திய குழு



மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடவுள்ளது.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின்போது எவருக்கும் வாக்களிப்பதில்லை என்ற கட்சியின் முடிவுக்கு சில எம்.பிக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இந்நிலையிலேயே மத்திய குழு அவசரமாகக் கூட்டப்பட்டுள்ளது.

## இனப்படுகொலையாளியான கோட்டாபயவை சர்வதேச நீதிமன்றிடம் கையளிக்க வேண்டும்!

### மலேசியத் தமிழர்கள் அணிதிரண்டு கோஷம்; சிங்கப்பூர் தூதரிடம் மகஜரும் நேரில் கையளிப்பு



சிங்கப்பூரில் தற்போது நிலைகொண்டுள்ள இலங்கையின் முன்னாள் முன்னாள் ஜனாதிபதியும் தமிழனப் படுகொலையாளியுமான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ☞03

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்; பிரிட்டனின் உதவியுடன் விசாரணை

### பதில் ஜனாதிபதி ரணில் அதிரடி அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சரியான விசாரணைகள் இன்மையால் இந்தப் பிரச்சினை இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை என்று பதில் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- ☞2




## புதிய கட்சி தொடங்கும் போராட்டக் குழுவினர்!

புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கு கொழும்பு - காலிமுகத்திடல் போராட்டக் குழு தீர்மானித்துள்ளது.

‘மக்கள் போராட்டப் பிரஜைகள்’ என்ற பெயரில் இந்தக் கட்சியை ஆரம்பிப்பதற்கு அந்தக் குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிய கட்சிக்கான விண்ணப்பத்தை அந்தக் குழுவினர் தேர்தல்கள் ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசுக்கு எதிராகக் கடந்த ஏப்ரல் மாதம் முதல் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறு தகவல்.

நேற்றோ முன்தினமோ தன்னைச் சந்தித்த உதய கமன்பில்லவிடம் ஜனாதிபதி வேட்பாளரும் தற்போதைய பதில் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தமிழ் கூட்டமைப்பு குறித்து ஒரு தகவல் கூறி இருக்கின்றார்.

"தமிழ்க் கூட்டமைப்பில் சுமந்திரன் தவிரஎஞ்சியஅனைவரும்எனக்குத்தான் வாக்களிப்பர்" என்பதுதான் ரணில் உறுதிப் படக் கூறிய விடயம். இது பற்றி சுமந்திரனிடம் கேட்டேன்.

"ஆம். என் நிலைப்பாடு என்ன என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். அதை நான் அவரிடம் கடந்த ஒன்பதாம் திகதி பேசும் போது கூட தெளிவாகக் கூறியிருக்கிறேன். ராஜபக்ஷக்களுக்கு முதுகு கொடுக்க ரணில் முயன்றமை தவறு. முழுத் தவறு. மே 9ஆம் திகதி குழப்பங்களை அடுத்து ராஜபக்ஷகளுக்கு உதவி அளிக்க ரணில் குறுக்கு வழியில் போயிருக்காவிட்டால் கோட்டாபய அப்போதே ஓடி இருப்பார். அதை ரணிலே என்னிடம் ஒப்புக்கொண்டுள்ளார். ஆக இந்த இரண்டுமாதங்களாகஏற்பட்டபாதிப்புகள் எல்லாவற்றுக்கும் ரணிலே பொறுப்பு. அப்படி ராஜபக்ஷக்களுக்கு முதுகு கொடுத்த முறையற்ற விடயத்துக்குள் அவர் புகுந்தமையால்தான் – அந்தக் காரணத்துக்காக மட்டுமே – அவரை நான் எதிர்க்கிறேன். முழுமையாக எதிர்க்கிறேன்." – என்றார் சுமந்திரன்.

"சரி.அப்படியானால் நாளை (இன்று) மாலை நடைபெறக்கூடிய தமிழ் கூட்டமைப்பின் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டை கூட்டமைப்பு எடுத்தால் என்ன செய்வீர்கள்?" – என்று கேட்டேன்.

"இல்லை. கடைசி வரை அப்படி ஒரு முடிவு எடுக்கப்பட மாட்டாது. எடுக்கப்பட முடியாது" – என்று திட்டவட்டமாகவும், மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் கூறினார் சுமந்திரன். அதாவது ரணிலை ஆதரிக்கும் முடிவு இல்லவே இல்லை என்பதில் சுமந்திரனுக்கு இருக்கும் அதீத உறுதியைப் பார்க்கும் போது, 2005 ஜனாதிபதி தேர்தல்தான் எனக்கு நினைவுக்கு வந்தது. இப்படித்தான் ரணிலுக்கு மக்களை வாக்களிக்க விடுவதில்லை என்ற முடிவைப் புலிகள் அப்போது எடுத்தார்கள். ஆனால் மக்களின் கருத்தியல் ரணிலுக்கு மிகவும் சார்பாக இருந்தது. ரணிலுக்கு வாக்குகளை அள்ளிக் கொட்டத் தமிழ் மக்கள் ஆவலோடு துடித்துக் கொண்டிருந்தார்கள். தமிழ் மக்களை வாக்குச்சாவடிப் பக்கம் போக விட்டால், மக்கள் தங்களுக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு வாக்குகளை ரணிலுக்கு அள்ளிப் போட்டுவிடுவார்கள்என்பதுபுலிகளுக்குத் தெரியும். அதனால் வாக்குச்சாவடிப் பக்கமே யாரும் தலை காட்டக் கூடாது என்று கடுமையாக நிர்பந்தித்துத் தாம் நினைத்ததைச் செய்து முடித்தனர் புலிகள். ஆனால் அந்த முடிவுதான் அவர்கள் தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போட்டதாக ஆயிற்று. நான்கு வருடங்களுக்குள் புலிகள் இயக்கத்துக்கே மண் அள்ளிப் போட்டு விடயம் முடிந்தது.

இப்போதும் அதே நிலைமைதான். புலிகளின் இடத்தில் சுமந்திரன். கூட்டமைப்பு எம்.பிக்களை வாக்களிக்க அனுமதித்தால், அவர்கள் கூட்டமைப்பின் முடிவுக்கும் பெப்பே காட்டி விடுவர் என்பது சுமந்திரனுக்குத் தெரியும் – அப்போது புலிகளுக்குப் புரிந்த மாதிரி.

ஆகவே, சஜித்துக்கோ அல்லது டலஸுக்கோ வாக்களிக்கும் முடிவை கூட அவர் எடுக்க அனுமதிக்க மாட்டார். அப்படி எடுத்து வாக்களிக்க அனுமதித்தால், மக்கள் மனநிலையைப் பிரதிபலித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் ரணிலை ஆதரித்து வாக்களித்து விடுவர் என்ற அச்சம் நிச்சயம் சுமந்திரனுக்கு உண்டு. ரணிலுக்கு அப்படிக் கூட்டமைப்பு வாக்குகள் தப்பித் தவறியும் விழுந்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் சுமந்திரன், நிச்சயமாககூட்டமைப்புஎம்.பிக்கள் வாக்குச்சீட்டைக் கையால் தொடக்கூட அனுமதிக்காத விதத்தில் பகிஷ்கரிப்பு முடிவை இன்று கூட்டமைப்பை எடுக்க வைப்பார் என்பது உறுதி. புலிகள் அப்போது செய்த வேலையை இப்போது சுமந்திரன் செய்யப் போகின்றார். அன்று புலிகளின் நடவடிக்கைபடி ரணில் தோற்றார்.

இப்போது மாறி, கூட்டமைப்பின் ஒத்துழைப்பின்றியே – கூட்டமைப்பின் எதிர்ப்பின் பின்னணியிலே – ரணில் வென்று விட்டால் என்ன செய்வார் சுமந்திரன்?

சாவகாசமாக பைல் கட்டையும் தூக்கிக்கொண்டு, சம்பந்தனையும் இழுத்துக் கொண்டு, ரணிலுடன் அடுத்த சுற்றுப் பேச்சுக்கு புறப்பட்டு விடுவார், 'அரசியலில் என்ன வெட்கம், ரோஷம் பார்ப்பதற்கு இருக்கிறது?' என்று கூறிக்கொண்டு.

சரித்திரம் திரும்புகிறது. திரும்பினாலும் தமிழினம் உருப்படப் போவதில்லை. ஏனெனில் தலைமைத்துவங்கள் அப்படி...!

– மின்னல் –

## புதிய கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தி வந்த குழுவினர் தற்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்துள்ளனர்.

இவ்வாறான நிலைமையில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ள அவர்கள், அதனைப் பதிவு செய்து மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அதனைப் பயன்படுத்தவுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

## உயிர்த்த ஞாயிறு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த மே 13ஆம் திகதி தாம் பிரதமராகப் பதவி யேற்றபோது, நாளொன்றுக்கு 5 மணித் தியாலங்கள் மின்வெட்டு ஏற்பட்டதன் மூலம் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பின்னர் இரண்டு மாதங்களில் மின்சாரம் 3 மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டு விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டு நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு தீர்க்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் எரிபொருள் விநியோகத்துக்குக் கடினமான காலமாக இருக்கும். எவ்வாறாயினும், டீசல் இருப்புக்கள் பாதுகாக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் ஜூலை 21 முதல் பெற்றோல் விநியோகிக்கப்படும்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நாட்டின் குடிமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. 2 ஏக்கருக்கும் குறைவான வயல்களைப் பயிரிட்ட நெற்செய்கையாளர்களின் கடன்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ள நிலையில், நாட்டிலும் எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. வெளிநாடுகளுடனான உதவிக்கான கலந்துரையாடல்களும் முன்னேறி வருகின்றன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் முழுமையற்ற தன்மை காரணமாக இங்கிலாந்து அரசு மற்றும் அவர்களின் புலனாய்வுச் சேவைகளின் உதவி கோரப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே காரணம். பொதுமக்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் 19ஆவது திருத்தச் சட்டம் மீண்டும் கொண்டுவரப்படும்.

நாட்டின் அமைதியைச் சீர்குலைக்க முயற்சிக்கும் சக்திகள் சமூகத்துக்குள் இருக்கின்றன. இந்தச் சக்திகள் நாட்டின் முன்னேற்றத்தைச் சீர்குலைப்பதில் இருந்து தடை செய்யப்படும்.

அமைதியான போராட்டக்காரர்கள் முன்வைக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கண்டுபிடிக்கப்படும்.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கிவைத்து விட்டு, தனிநபரின் கருத்து வேறுபாடுகளால் நாடு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் அனைத்துக் கட்சி ஆட்சியை அமைக்க வேண்டும் – என்றார்.

## வாக்கெடுப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் தெரிவு இல்லை என்பதனடிப்படையில், நாங்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக் கொள்ள முடிவெடுத்திருக்கின்றோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. நேற்றுக் கொழும்பில் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாடாளுமன்றத்தில் வருகின்ற புதன்கிழமை (நாளை) நடைபெறவிருக் கின்ற ஜனாதிபதித் தெரிவு தொடர்பாக எமது கட்சியின் மத்திய குழு கூடி எமது நிலைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தோம்.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஜே.வி.பியின் ஆகியோரோடு சந்திப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

ஜனாதிபதித் தெரிவுக்காகத் தம்மை முன்மொழிந்து இருப்பவர்கள், தமிழ் மக்கள் சார்ந்து எந்தவித நலத்திட்டங்களையும் முன்னெடுக்க முடியாதவர்கள்.

அதுமட்டுமில்லாமல் – இன்றைய நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய மாற்றம் – விசேடமாக தெற்கில் மக்கள் மட்டத்திலேயே இருக்கக்கூடிய மிகப்பெரிய எதிர்ப்பைத் தாண்டி, எந்தவித மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொள்வதற்குத் தயாராக இல்லை என்பதை அவர்களுடனான சந்திப்புக்கள் வெளிப்படுத்தியிருந்தன.

அந்தவகையிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, புதன்கிழமை (நாளை) நடைபெறவிருக்கின்ற வாக்கெடுப்பில் கலந்துகொள்ளப்போவ தில்லை என்கின்ற முடிவுக்கு எமது மத்திய குழு ஏகமனதாக வந்திருக்கின்றது.

இந்த ஜனாதிபதித் தெரிவுக்கு பெயர் முன்மொழிந்து இருப்பவர்களில் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை நாங்கள் முதலிலேயே நிராகரித்து விட்டோம். குறித்த இந்த நிராகரிப்பும் எமது மத்திய குழுவால் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவாகும்.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக இன்றைக்கு இந்த நாட்டில் இருக்கக்கூடிய குழப்பங்களுக்கு கோட்டபாய ராஜபக்ஷ எந்த அளவுக்குக் காரணமாக இருக்கின்றாரோ, அதனுடைய தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். இதன் காரணத்தினாலே அவரை ஏற்க முடியாது என்ற முடிவுக்கு வந்துள்ளோம் – என்றார்.

## ஒருபோதும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாறாது எனவும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

காலிமுகத்திடல் போராட்ட ஏற்பாட்டுக் குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நாளை இடைக்கால ஜனாதிபதியை நியமிக்கும் பணி இடம்பெறவுள்ள நிலையில், போராட்டக் குழுவினர் தங்கள் நிலைப்பாட்டை எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்தனர்.

தானோ அல்லது தனது கட்சியோ அல்லது தனது கூட்டணியோ ஒருபோதும் போராட்டத்தின் கோரிக்கைகளுக்குத் துரோகம் செய்யவில்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எதிர்காலத்திலும் அவ்வாறு துரோகமிழைக்கப்படமாட்டாது எனவும் உறுதியளித்தார்.

இதேவேளை, காலிமுகத்திடல் போராட்ட ஏற்பாட்டுக் குழுவினர் நேற்று எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்த அதே வேளை, அநுரகுமாரவின் தேசிய மக்கள் சக்தி, மனோவின் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ரிஷாத்தின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

## ரணிலும் சஜித்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நேற்று மாலை சம்பந்தனின் இல்லத்துக்கு நேரில் சென்று சம்பந்தனோடு நீண்ட நேரம் கலந்துரையாடி கூட்டமைப்பின் ஆதரவைக் கேட்டுக் கொண்டார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் இவ்வாறு சஜித் பிரேமதாஸ, சம்பந்தனின் வீட்டுக்குச் சென்று சம்பந்தனுடன் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டம் சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது புதிய ஜனாதிபதித் தெரிவு தொடர்பில் நீண்ட வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

கூட்டத்தின் நிறைவில், ஜனாதிபதித் தெரிவுக்கான வேட்புமனு நாடாளுமன்றத்தில் நாளை (இன்று) தாக்கல் செய்யப்படவுள்ளது. அதன்பின்னர் நாளை (இன்று) மாலை மீண்டும் கூடி எந்த வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் முடிவெடுப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இதேவேளை, புதிய ஜனாதிபதித் தெரிவில் யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்த தீர்மானத்தை பல கட்சிகள் இன்னும் எடுக்கவில்லை.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன இன்று மாலை இது குறித்த தீர்மானத்தை எடுத்து அறிவிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. வாக்கெடுப்பின்போது நடுநிலை வகிக்கவும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வாக்கெடுப்பைப் புறக்கணிக்கவும் தீர்மானித்துள்ளன.

ரவூப் ஹக்கீமின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பனவும் இன்று தங்களது தீர்மானத்தை அறிவிக்கும் என்று கூறப்படுகின்ற போதும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் தீர்மானத்துடன் இசைந்து செல்லும் உத்தேசத்தில் அந்தக் கட்சிகள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.



காலைக்கதிர்
Kalaikkathir

### இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிராக மலேசியத் தமிழர்கள் நேற்று அணிதிரண்டு குரல் எழுப்பியுள்ளனர்.

தலைநகர் கோலாலம்பூரில் உள்ள சிங்கப்பூர் தூதரகத்தின் முன் பினாங்கு மாநில் துணை முதல்வரும் நாடுகடந்த தமிழீழ அரசின் மதியுரைஞர் குழுப் பிரதிநிதியுமாகிய பேரா.இராமசாமி தலைமையில் அணிதிரண்ட தமிழர்கள், இனப்படுகொலையாளியைச் சிங்கப்பூர் வெளியேற்றி சர்வதேச நீதிமன்றிடம் கையளிக்க வேண்டும் என்ற முழக்கத்தை எழுப்பினர்.

மலேசியத் தமிழர் அரசியல் பிரதிநிதிகளான சதீஸ் முனியாண்டி, டேவிட் மார்செல் உட்பட பல தமிழர் அமைப்பினர் இதில் பங்கெடுத்திருந்தனர்.

மலேசியாவுக்கான சிங்கப்பூர் தூதுவரைச் சந்தித்துக் கோரிக்கை மனுவைக் கையளித்து, தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து சிங்கப்பூரில் இருந்து வெளியேற்றப்பட்டு சர்வதேச நீதிமன்றிடம் இனப்படுகொலையாளியான கோட்டாபயவைக் கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன் வைத்தனர்.

சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் கோட்டாபய ராஜபக்ஷவைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு நாடு கடந்த தமிழீழ அரசு தொடர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையின் அரசியல், இராணுவத் தலைவர்களுக்கு எதிராக ஐ.நா. உறுப்பு நாடுகள், சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிச்சல் பச்லெட் அம்மையார் முன்னர் வலியுறுத்தியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

### 'ஆவா' மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயங்களுக்குள்ளான அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

10 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது. தாக்குதல் நடத்தியவர்களில் ஐவர் கைதுசெய்யப்பட்டதுடன் வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அண்மையாக நேற்று நண்பகல் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆவா வினோதன் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குச் சென்று திரும்பியபோது வீதியில் நின்ற 10 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பித்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த வினோதன் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாக்குதலின்போது வாள் ஒன்று உடைவடைந்துள்ளது.

தாக்குதல் நடத்தியவர்களில் அளவெட்டியைச் சேர்ந்த ஐவர் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கனி குழுவுக்கும் ஆவா குழுவுக்கும் இடையிலான முறுகல் நிலையே இந்த வாள்வெட்டுத் தாக்குதலுக்குக் காரணம் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

# 'கோட்டா கோ கம'வினருக்கு வந்த நான்கரைக் கோடி ரூபா

காலி முகத்திடலில் அமைந்துள்ள 'கோட்டா கோ கம' போராட்டத்தளத்தின் முன்னணி செயற்பாட்டாளர்கள் மூவருக்கு வெளிநாடுகளில் இருந்து பெருமளவு நிதி கிடைக்கப் பெற்றுள்ளமை குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




சம்பவம் தொடர்பில் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர் எனபொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ரட்டா என அழைக்கப்படும் ரத்திது சேனாரத்ன, திலான் சேனாநாயக்க மற்றும் அவிஷ்க விராஜ் கோனார ஆகிய மூன்று செயற்பாட்டாளர்கள் கடந்த வாரம் இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் மூன்று புதிய கணக்குகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மூன்று கணக்குகளிலும் வெளிநாடுகளில் இருந்து 45 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில மணிநேரங்களுக்குப் பின்னர், வங்கிக்கு வந்ததாகக் கூறப்படும் அவர்கள், முழுத் தொகையையும் மீளப் பெற்றதாகவும், பணத்தைப் பெற்றதற்கான காரணத்தை விசாரித்த வங்கி அதிகாரிகளை மிரட்டினர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

### இன்று வேட்புமனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உஷார் நிலையில் உள்ளனர். புலனாய்வுப் பிரிவும் களமிறக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய ஜனாதிபதித் தெரிவு இடம்பெறவுள்ள சூழ்நிலையில், நாட்டில் நேற்று முதல் அமுலாகும் வகையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குக் கடும் எதிர்ப்புகள் வலுத்துள்ளன.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடுகின்றது. இதன்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

தேர்தலில் போட்டியிடவுள்ள ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும ஆகிய நால்வரும் கொழும்பில் நேற்று முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தியிருந்தனர். தமக்கான ஆதரவைத் திரட்டும் முயற்சியில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு, நாடாளுமன்றகி கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. இதன்போது ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி கட்சியின் ஆதரவு ரணிலுக்கென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெருமவுக்கும் இடையிலான விசேட சந்திப்பும் நேற்று இடம்பெற்றது.

'டலஸ் ஜனாதிபதி, சஜித் பிரதமர்' என்ற இலக்கை அடையும் நோக்கிலேயே பலரின் முயற்சியால் சந்திப்புக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், இதன்போது இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னர் மற்றுமொரு கலந்துரையாடல் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்பின்னர் விமல், வாசு, கம்மன்பில உட்பட 10 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான பேச்சு நடைபெற்றது. இறுதி இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. எனினும், 'டலஸ் ஜனாதிபதி, சஜித் பிரதமர்' என்ற விடயத்துக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது. 10 கட்சிகளின் நிலைப்பாடும் இன்று அறிவிக்கப்படும்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவும் நேற்று முக்கிய சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.

# மீண்டும் கொரோனா பரவும் ஆபத்து என்று எச்சரிக்கை!

இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படக்கூடும் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக உலகம் முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு இலங்கைக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாவின் புதிய மாறுபாடு நாட்டிற்குள் நுழைந்ததா என்பதை கண்டறிய வேண்டும் என அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 34 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் பதிவான மொத்த கொரோனா பாதிப்புகளின் எண்ணிக்கை 6 இலட்சத்து 64 ஆயிரத்து 414 ஆக பதிவாகியுள்ளது

# ஓகஸ்டில் கோட்டா நாடு திரும்புவாராம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நாடு திரும்ப தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் நாள்களில் சவுதி அரேபியா செல்லவுள்ளார்.

இம்மாத இறுதி வரை அங்கு தங்கியிருக்கும் அவர், அதன் பின்னர் நாட்டுக்குத் திரும்பி வரத் திட்டமிட்டுள்ளார்.

மகனின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா செல்லும் திட்டத்தையும் அவர் கைவிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி அடுத்த மாதம் நாடு திரும்பவுள்ளதாக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

பிறந்த தாய்நாட்டிற்கு தனது சிறந்த பங்களிப்பை தொடர்ந்து வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் தாம் இருக்கிறார் எனக் கோட்டாபயராஜபக்ஷதனது இராஜினாமா கடிதத்தில் கூறியிருந்தார்.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுரு மீது பொலிஸார் தாக்குதல்

## வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுரு ஒருவரைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் தாக்கினார் என்று தெரிவித்து மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா, நெளுக்குளம் – நான்காம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்தில் நேற்று எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் மக்கள் நின்றுகொண்டிருந்தபோது பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர், மதகுரு ஒருவரைத் தாக்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து அங்கு நின்ற மக்கள் வவுனியா – மன்னார் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு தாக்கப்பட்ட மதகுருவிடம் பொலிஸ் பொறுப்பதிகாரி மன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதனால் அங்கு பதற்ற நிலைமை காணப்பட்டதோடு நீண்ட நேரமாக வவுனியா – மன்னார் பிரதான வீதியின் போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து குறித்த இடத்துக்கு வருகை தந்த பொலிஸ் பொறுப்பதிகாரி தாக்கப்பட்ட மதகுருவிடம் மன்னிப்புக் கேட்டதற்கு இணங்க ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (100)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் திராணி இல்லை

**தமிழர் தரப்பு தீர்க்கமான – தீர்மானகரமான – ஒரு முடிவை எடுக்க வேண்டிய நாள் இன்று.**

**குறிப்பாகத் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் தங்களுக்குள் ஒன்று கூடி ஒரே தீர்மானத்தை எடுத்துத் துணிச்சலாக விடயங்களை நகர்த்த வேண்டிய வேளை இது.**

**தமிழ் மக்களிடம் தாங்கள் பெற்ற ஆணையை, தமது வாக்குகள் மூலம் நாடாளுமன்றத்தில் பிரயோகிக்க வேண்டிய மிக முக்கியமான வரலாற்றுக் கட்டம் இது.**

**வெளிப்படையாகவும் தீர்க்கமாகவும் ஒரு முடிவு எடுத்து, அதனைப் பகிரங்கப்படுத்தி, அதன்படி செயற்படும் முதுகுத் துணிச்சலை – அரசியல் திராணியை – தமிழ்த் தலைவர்கள் வெளிப்படுத்த வேண்டிய வேளை இது.**

**ஆனால், பெரும்பாலும் இத்தகைய நெருக்கடி சமயத்தில் வெளிப்படையாக ஒரு தீர்மானம் எடுக்காமல் ஒளித்துப் பிடித்து விளையாடுவது என்பது தமிழர்களின் மிதவாதத் தலைமையின் பண்பியல்புதான்.**

**முதலாவது ஜனாதிபதித் தேர்தல் 1982இல் நடைபெற்ற சமயமும் இதுதான் நடந்தது. அப்போது தமிழர் மீது எதேச்சாதிகாரத்தைக் கட்டவிழ்த்து விட்டு, அரசு படைகளை ஏவி, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை முனைப்புடன் முன்னெடுத்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு எதிரான உணர்வலைகள் மக்கள் மத்தியில் பெருக்கெடுத்து ஓடியது. அது வெளிப்படையாகவும் தென்பட்டது. ஆனால் அன்று தமிழர்களுக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கிய அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் போன்றோருக்கு தமிழ் மக்களின் அந்த உணர்வுநிலை புரிந்தும், அதை வெளிப்படையாக அறிவித்து அதனை ஒட்டி ஒரு நிலையெடுக்கும் அரசியல் திராணி – துணிச்சல் – இருக்கவில்லை. அதனால் எந்தப் பக்கமும் ஆதரவு எடுக்காத – தமது மக்களை ஒரு திசைக்கு வழிப்படுத்தாத – நழுவல் – வழுவல்போக்கை கொள்கை முடிவாக அறிவித்தனர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள். ஆனால் தமிழ் மக்களோ, தென்னிலங்கைக்கு மாறாக ஜே.ஆருக்கு எதிராக, சு.க.வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவவுக்குப் பேராதரவு காட்டி தங்கள் கருத்தியலை தெளிவாக வெளிப்படுத்தினர்.**

**அதே முதுகுத் திராணி இல்லாத நிலைமைதான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கும். இது தென்னிலங்கையின் அதிபரைத் தேர்ந்தெடுக்கும் விவகாரம், நாம் அதில் சம்பந்தப்பட்டவில்லை, அதனால் வாக்குச் சீட்டைத் தொடக்கூட மாட்டோம் என்ற கழுவுற மீனில் நழுவுற மீன் நிலைப்பாட்டை அவர்கள் பெரும்பாலும் எடுப்பர் என்பது நிச்சயம்.**

**மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் போக்குத்தான் இது.**

**அடுத்த இரண்டே கால் ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக இருக்கப் போகின்றவரால் நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தந்துவிட முடியும் என்று நம்புவதற்கு இடமில்லை. சாத்தியமும் இல்லை.**

**ஆனால், தமிழர் தேசம் இன்று எதிர்கொள்ளும் மோசமான உடனடி நெருக்கடிகளில் இருந்து சில மீட்பு நடவடிக்கைகளை அந்த ஜனாதிபதி மூலம் நிறைவேற்ற முடியும்.**

**அதற்கான களநிலைமையை – யதார்த்தப் புறநிலையை – பேணுவதற்கு இந்தத் தேர்தல் ஓர் அரிய சந்தர்ப்பம். ஒளித்துப் பிடித்து விளையாடுவதன் மூலம் கூட்டமைப்பு இதில் சாதிப்பதற்கு ஒன்றுமில்லை – தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர.**

# ஜனாதிபதியாகப் பதவியை வகிப்பதற்கு ரணிலுக்கு தார்மீக உரிமை கிடையாது

## வாசுதேவ காட்டம்



புதிய ஜனாதிபதி தெரிவிற்கு போட்டியிடும் சகல வேட்பாளர்களிடமும் பரந்துபட்ட பேச்சுகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கு அவருக்கு தார்மீக உரிமை கிடையாது என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பதவி வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதி பதவிக்குத் தற்போது நால்வர் போட்டியிடுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். இன்று இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள வேட்பு மனுதாக்கலின் பின்னரே எத்தனை பேர் போட்டியிடுகிறார்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் விரிவுபடுத்தப்பட்ட பேச்சுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

சமூகக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அவசியமாகும். அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டால் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தொடர்ந்தும் ஜனாதிபதியாக பதவி வகிக்க எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

பொது தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர் நாட்டின் முதல் பிரஜையாக செயற்படுகின்றமை மக்களாணைக்கு முற்றிலும் விரோதமானது.

புதிய ஜனாதிபதி தெரிவைத் தொடர்ந்து பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிக்காமல் தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என வலியுறுத்தவுள்ளோம்.

அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சகல அரசியல் கட்சிகளும் பொது இணக்கப்பாடுடன் செயற்பட வேண்டும்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கும் என அந்தக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளதை பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல். பீரிஸ் மறுத்துள்ளார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளை பல காரணிகளில் ஒரு காரணியாகக் குறிப்பிட வேண்டும். – என்றார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆட்சியாளர்களும் மக்களின் கோரிக்கையை புரிந்துகொள்ளவேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 19

மக்கள் எதனைக் கோருகின்றனர் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆட்சியாளர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

அதனை விடுத்து மக்களால் நிராகரிக்கப்படுபவர்கள் மீண்டும் ஆட்சிப் பீடமேறினால், அதன் விளைவுகள் பாரதூரமானவையாகவே அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜூலை 9 ஆர்ப்பாட்டத்தின் மூலம் மக்கள் புகட்டிய பாடத்திலிருந்து அனைவரும் படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்கள் எதிர்க்கும் தலைவருக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும்.

ராஜபக்ஷக்கள் சதித்திட்டங்கள் ஊடாக பொம்மை அரசியலில் ஈடுபடக் கூடும். அதற்கான காய் நகர்த்தல்களே தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே ஜனாதிபதி தெரிவிற்கான வாக்களிப்பின் போது சிந்தித்து செயற்படுமாறு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

நாட்டை இனியாவது சரியான பாதையில் கொண்டு செல்ல அனைவரும் முயற்சிக்க வேண்டும். அதற்காகவே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கியிருக்கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் முழுமையான ஆதரவு அவருக்கு வழங்கப்படும்.

தற்போதுள்ள அரசாங்கம் மக்களுக்கும் பாதுகாப்பு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கு முயற்சிக்கிறது.

அதன் காரணமாகவே பிரதமர் அலுவலகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றிய போது, துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளாதமைக்காக அந்த சந்தர்ப்பத்தில் பாது காப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவக் கட்டளை தளபதி அனைத்து பணிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் அரசாங்கத்தையே மீண்டும் நாடாளுமன்றத்தின் ஊடாகத் தெரிவு செய்து , பிரச்சினைகளை மேலும் தீவிரமாக்க முடியாது.

மக்கள் எதனைக் கோருகின்றனரோ அதனை வழங்க வேண்டும். இதனை நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆட்சியாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும். – என்றார்.

# இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்கள் எல்லை மீறவில்லை என்கின்றது அரசு



இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் கிளப்படும் அச்சங்களை இந்திய மத்திய அரசு அடியோடு நிராகரித்துள்ளது.

இந்தியாவின் மொத்த வெளிப் பொறுப்பு – கடன் கடப்பாடு – 620.7 பில்லியன் டொலர்கள். ஆனால் இதில் மையத்தின் – மத்திய அரசின் பங்கு அல்லது கடப்பாட்டுப் பொறுப்பு – வெறும் 130.8 பில்லியன் டொலர்கள் மட்டுமே. இது, மொத்த கடன் பொறுப்பில் 21 வீதம் மட்டுதான் ஆகும்.

இதில் இந்தியாவின் சிறப்பு கடன் பெறுகை உரிமை ஒதுக்கீடும் அடங்கும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்திய மத்திய அரசு கடன் சுமையில் உள்ளது என்ற வதந்தி ஆதாரமற்றது, என்று ஒரு ஆதார வட்டாராம் 'எக்கனமிக் ரைமிடம்' கூறியது.

இந்தக் கடனில் 40 வீதத்துக்கும் அதிகமான தொகை நிதி அல்லாத கூட்டு நிறுவனங்களுடையவை என்றும் அந்த வட்டாரம் தெரிவித்தது.

ஒரு வருடத்திற்குள் 267 பில்லியன் டொலர்களை இந்தியா திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதால், இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் குறித்த கவலைகள் அதிகரித்துள்ளன எனப் பல தரப்புகளிலும் சுட்டிக் காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்தே கடன் நிலைமை பற்றிய உண்மை நிலைமைகளை அதிகாரிகள் தெளிவுபடுத்தினர்.

கடன்களைத் திருப்பிச் செலுத்தும் கட்டாயக் கடப்பாடு இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை மேலும் அரித்து, மேலும் பணமதிப்பிழப்புக்கு வழிவகுக்கும் என்ற அச்சத்தை தற்போதைய நிலைமை ஏற்படுத்தியது.

ஆனால், "அத்தகைய இந்தப் பகுப்பாய்வு முழுமையடையாதது, தவறானது, மேலும் சில அடிப்படை உண்மைகளைத் தவறவிட்டது என்று ஓர் ஆதாரபூர்வ வட்டாரம் விளக்கமளித்தது.

267.7 பில்லியன் டொலர்கள் கடனை ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியுள்ளது என்பது உண்மை என்றாலும், இதில் மையத்தின் – மத்திய அரசின் – பங்கு வெறும் 7.7 பில்லியன் டொலர்கள் அல்லது 3 வீதத்துக்கும் குறைவாக உள்ளது.

இதனால் அரசாங்கத்தின் கடன் அளவு மிகவும் சமாளிக்கக் கூடிய அளவில் பாதுகாப்பாக இருக்கிறது என்று விளக்கமளிக்கப்பட்டது.

2013 – 14 நிதியாண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52.2 வீதமாக இருந்த மத்திய அரசின் கடன் 2019 – 20 நிதியாண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 51.8 வீதமாகக் குறைந்துள்ளது என்று இந்திய றிசேர்வ் வங்கியின் தரவு வெளிப்படுத்துகிறது.

இருப்பினும், இது 2021 நிதியாண்டில் மீண்டும் ஒரே ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 வீதத்தால் அதிகரித்தது – முக்கியமாக கொவிட் –19 நெருக்கடி காரணமாக.

இந்தியாவின் மொத்த பொதுக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86.9 வீதம் அதிகமாக உள்ளது, ஆனால் பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் சிறந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அமெரிக்காவின் மொத்த பொதுக் கடன் 125.6 வீதம், பிரான்ஸ் 112.6 வீதம், கனடா 101.8 வீதம், பிரேசில் 91.9 வீதம் மற்றும் பிரிட்டன் 87.8 வீதம் அந்தந்த நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளது.

இந்தியாவின் மொத்தக் கடனின் சதவீதமாக வெளிநாட்டுக் கடன் 2013 – 4 இல் 6.4 வீதமாக இருந்து. 2021 – 22 இல் இது 4.7 வீதமாகக் குறைந்துள்ளது.

எவ்வாறாயினும், தரவுகள், சில மாநிலங்களின் கடன்கள் பற்றிய கவலைகளை எழுப்புகின்றன. இது ஏற்கனவே இந்திய றிசேர்வ் வங்கி மற்றும் பொருளாதார நிபுணர்களால் மீண்டும் மீண்டும் கோடிகாட்டப்பட்டுள்ளது. பல மாநிலங்கள் பட்ஜெட்டுக்கு வெளியே கடன் வாங்குவதற்கும் ஆதாரம் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**(மூலம்: 'எக்கனமிக் ரைம்')**

# இந்தியாவின் புதிய ஜனாதிபதி; வியாழனன்று தேர்தலின் முடிவு



இந்தியாவின் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. நேற்றுக் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நாடாளுமன்ற அலுவலகம், மாநில சட்டசபை அலுவலகங்களில் இதற்கான தேர்தல் நடந்தது. எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் தேர்தலில் விறுவிறுப்பாக வாக்களித்தனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தனது வாக்கைப் பதிவு செய்தார். டெல்லியில் பிரதமர் மோடி தனது வாக்கைப் பதிவு செய்தார்.

ஜூலை 21ஆம் திகதி வியாழக்கிழமை குடியரசுத் தலைவர் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தலில் வெற்றிபெறும் புதிய ஜனாதிபதி ஜூலை 25 ஆம் திகதி பதவி ஏற்க உள்ளார். இந்த தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக யஷ்வந்த் சின்கா போட்டியிட்டார். அதேபோல் ஆளும் பா.ஜ.கவின் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரௌபதி முர்மு களமிறங்கியுள்ளார்.

# கொரோனாவால் பாதிக்கப்பட்ட அமைச்சர் நாசரும் வாக்களிப்பு

**இந்தியாவில் 15 ஆவது குடியரசுத் தலைவரை (ஜனாதிபதியை) தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வாக்குப்பதிவு நேற்று மாநில சட்ட மன்றங்களிலும் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நடைபெற்றது.**

**தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட அமைச்சர் நாசர் வாக்களித்தார். அவர் கொரோனா கவச உடை அணிந்து வாக்களித்தார்.**

**கொரோனா நோய்தொற்றாளர்கள் வாக்களிக்க மாலை 4 மணி முதல் 5 மணி வரை விசேட நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.**




# சக்கர நாற்காலியில் வந்து வாக்களித்த மன்மோகன் சிங்

**இந்திய ஜனாதிபதி தேர்தலில், இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் சக்கர நாற்காலியில் வந்து வாக்களித்துள்ளார்.**

**தற்போதைய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக் காலம் ஜூலை 24 ஆம் திகதி நிறைவடைகிறது.**

**இதன் காரணமாக இந்தியாவின் அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கடந்த மாதம் வெளியிட்டிருந்தது. அதன்படி, நாட்டின் 15 ஆவது ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தலுக்கான வாக்குப்பதிவுநேற்று நாடு முழுவதும் நடைபெற்றது. தேர்தலில் ஆளும் பா.ஜ.க. கூட்டணி சார்பில் திரௌபதி முர்மு, எதிர்க்கட்சிகள் சார்பில் யஷ்வந்த் சின்ஹா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.**

**இந்தத் தேர்தல் நேற்று மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. இந்த நிலையில், இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் சக்கர நாற்காலியில் வந்து தனது ஜனநாயக கடமையை ஆற்றினார்.**



# ஈழத் தமிழர்களுக்காக சுதந்திரமான பொது வாக்கெடுப்புக்கு வழிகோலுமாறு அமெரிக்க இராஜதந்திரிகளிடம் கோரிக்கை!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் விடுத்தார்







கடந்த 2022.07.12 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை வோசிங்ரன், டி.சி. – ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் மற்றும் அரச சட்ட சபை உறுப்பினர்களையும் மாநிலத் திணைக்கள அதிகாரிகளையும் வோசிங்ரன், டி.சி.யில் சந்தித்துக் கலந்துரையாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார சூழல்பற்றி விளக்கமளித்ததோடு, தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு சுதந்திரமான பொதுவாக்கெடுப்பு ஒன்றே பொருத்தமானது என்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளார்.

அதேவேளை, பல்லாயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்கு வழிவகுத்த 30 ஆண்டுகால இனவிடுதலைப்போர் மௌனிக்கப்பட்டு 12 ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில், அந்தப் போருக்கான அடித்தளமாக இருந்த ஈழத்தமிழ் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் அமெரிக்காவின் தலைமைத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

காலம்காலமாக இலங்கை அரசியல் அதிகாரபீடங்களுக்கு வந்த அனைத்து சிங்கள தலைமைத்துவங்களும் தமது அரசியல் கட்சிகள் எவையாயினும், எப்போதுமே தமிழர்களுக்கெதிராகவே செயற்பட்டிருந்ததோடு அவர்களில் ஒரு சிங்களத் தலைவரேனும் தமிழர்களுக்கு முழு உரிமைகளையும் வழங்க முன்வந்திருக்கவில்லை.

அதனடிப்படையில் இலங்கையின் தற்போதைய வளர்ச்சி நிலையில், அந்தப் பிராந்தியத்துக்கு அமைதியையும் திடத்தன்மையையும் கொண்டு வரக் கூடியதொரு பொதுவாக்கெடுப்பை ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் நடத்துவதன் மூலம், தமிழர்கள் ஒரு பூர்வீக தேசிய இனத்தவர்கள் என்ற அங்கீகாரத்தோடு, வடக்கு, கிழக்குப் பிராந்தியங்கள் தமிழர்களின் மரபுவழித் தாயகம் என்ற அடிப்படையில் ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதற்கு காத்திரமான பங்களிப்பை வழங்குமாறு அமெரிக்காவிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்காகக் குரல் கொடுத்துவரும் அமெரிக்காவிலுள்ள புலம்பெயர் தமிழர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி கலந்துரையாடலின்போது, ஈழத்தமிழர்களின் நலன்கருதி, அமெரிக்க அரசு கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்வைத்தார்.

1948 இற்கு முன்பிருந்தே இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் ஈழத் தமிழ் மக்களுக்காகவும் அவர்களது வழித்தோன்றல்களுக்காகவும், தமது தாய்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர்களிடையே ஜனநாயகரீதியாகவும் அமைதியாகவும் தமது சுதந்திரத்தைத் தீர்மானிப்பதற்காக, சர்வதேச சமூகத்தால் கண்காணிக்கப்படும் சுதந்திரமான பொதுவாக் கெடுப்பொன்றை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது.இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிறுத்தி இனப்படுகொலை, மனித குலத்துக்கெதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள், பகைமை மற்றும் பிரிவினைவாதக் குற்றங்களுக்கெதிராக விசாரணைசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு, இனப்படுகொலைக் குற்றத் தடுப்பு மற்றும் தண்டனைக்கான தீர்மானத்தின்கீழும் சித்திரவதைக்கெதிரான தீர்மானத்தின்கீழும் பகைமை மற்றும் பிரிவினைவாதக் குற்றங்களின்கீழும் சர்வதேச நீதிக்கான நீதிமன்றத்தின் முன்னால் இலங்கையை நிறுத்தி அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது. இந்தப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் வரையில் நாட்டின் வடக்கு–கிழக்குப் பிராந்தியத்திலுள்ள ஈழத்தமிழர்களை ஆட்சிசெய்யவும் அவர்களையும் அவர்களது நிலங்களையும் பாதுகாப்பதற்குமாகவோர் இடைக்காலசர்வதேசப்பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குவதற்கானநடவடிக்கைகளை எடுப்பது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, பாரிஸ் கிளப், ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கை பொருளாதார உதவியைக் கோரும்வேளையில்–நிபந்தனைகளற்று எந்தவொரு உதவியும் வழங்கப் படக்கூடாதென தமிழர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஐ.நா. மற்றும் யு.என்.எச்.சி.ஆர். உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கான இலங்கையின் முதன்மையான பொறுப்புக்களையும் இலங்கையின் ஏமாற்று வடிவங்களையும் சர்வதேச சமூகம் விளங்கிக்கொள்ளவேண்டும். இலங்கைக்கான உதவிகள் எவையேனும் வழங்கப்படும் போதுபின்வரும் நிபந் தனைகளை விதிக்கப்படவேண்டும். நிறைவேற்றப்படாத அனைத்து யு.என்.எச்.சி.ஆர். தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

மீண்டும் இடம்பெறாதென்ற உத்தரவாதமாக, இலங்கை, ரோமானிய சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு இனவிடுதலைப் போரின் போது தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் குற்றங்களுக்குமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படுவதற்கும் சம்மதிக்கவேண்டும்.

தமிழர் பிராந்தியத்திலிருந்து இலங்கை இராணுவத்தை அகற்றுதல் மற்றும் போருக்கு முன்னர் 1983 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்த இலங்கை இராணுவத்தின் அளவிற்கு இராணுவப் படையினரின் எண்ணிக்கையைக்குறைப்பது. இடைக்காலசர்வதேசப் பாதுகாப்புப் பொறிமுறையையும் ஈழத் தமிழர் களுக்காக சுதந்திரமான பொது வாக்கெடுப்பினையும் ஏற்றுக்கொள்வது என்பவை உள்ளிட்ட பல முக்கியவிடயங்கள் மேற்படி கலந்துரையாடலின் போது, அமெரிக்க இராஜதந்திர குழுவினருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுஜனப் பெரமுன எம்.பிக்களுக்கு வீடுகள் மீளநிர்மாணித்து வழங்கப்படும்!

## பதில் ஜனாதிபதி உறுதி



மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் சொத்துக்களை இழந்த அனைத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளையும் மீளக் கட்டுவதற்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை தீர்மானம் எடுத்துள்ளார் என சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வீடுகளை அழித்தவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும், தனது ஆட்சியில் நாட்டில் வன்முறைகளுக்கு இடமில்லை எனவும் பதில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் .

மேலும் அழிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ரணில் விக்கிரமசிங்கஉரியஅதிகாரிகளுக்கு ஏற்கனவேஅறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவைவிட அதிகமாக இலங்கைக்கு கடன் வழங்குகின்ற நாடாக இந்தியா!

*இலங்கைக்கு அதிகளவு கடனுதவி வழங்கிய நாடாக சீனாவை பின்னுக்கு தள்ளி இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.*

*இந்த வருடம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான 4 மாத காலப்பகுதியில், இந்தியா இலங்கைக்கு 376.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது.*

*அத்துடன், சீனா 67.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது.*

*எவ்வாறாயினும் இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை இலங்கைக்கு வழங்கப்பட்ட அகில இந்திய கடன் வசதி சுமார் 350 கோடி அமெரிக்க டொலர்களாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது*

# நாட்டில் எரிபொருள்கள் இன்மையால் வைத்தியசாலைகள் முடங்கும் நிலை!



எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட வைத்தியர் ஹரித அலுத்கே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் .

இதுவரையில் எந்தவொரு வேலைநிறுத்தத்திலும் கலந்து கொள்ளாத சிறுவர் வைத்தியசாலையும் பணிப் புறக்கணிப்புக்கு தயாராகி வருவதாக அவர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

# தமது வெற்றி பற்றி இல்லாமல் நாட்டின் எதிர்காலம் குறித்து ஜனாதிபதி வேட்பாளர்கள் அவதானம் செலுத்தல் வேண்டும்!

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை

புதிய ஜனாதிபதி தெரிவிற்காக போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தங்களின் வெற்றி குறித்து அவதானம் செலுத்தாமல் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தி பொது இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டும்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ராஜபக்ஷர்களை பாதுகாப்பதை விடுத்து மக்களின் கோரிக்கைக்கமைய செயற்பட வேண்டும் என 43 ஆவது படையணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசமைப்பிற்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டமையால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபஷ மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் வீழ்த்தியுள்ளார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளார்கள்.

போராட்டக்காரர்களின் அர்ப்பணிப்பைக் கருத்திற்கொண்டு சட்டவாக்கசபை பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

நாடாளுமன்றில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பின் போது ஒருவரைத் தோற்கடித்து பிறிதொருவரை வெற்றிப்பெற செய்யும் விடயம் தொடர்பாக அவதானம் செலுத்தாமல், வங்குரோத் தடைந்துள்ள நாட்டை எவ்வாறு நெருக்கடியில் இருந்து மீட்கலாம் என்பது தொடர்பில் சகல தரப்பினரும் அவதானம் செலுத்த வேண்டும்.

69 லட்சம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியைநாட்டுமக்கள்ஜனநாயகரீதியில்புறக்கணித்துள்ளார்கள். இடைக்கால ஜனாதிபதி தெரிவு ஜனநாயகக் கோட்பாட்டிற்கமையவும், எதிர்காலத்தை கருத்திற்கொண்டதாகவும் அமைய வேண்டும். போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் அனைவரும் முதலில் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.



நாடாளுமன்றில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு பெரும்பாலான ஆசனங்கள் உள்ளன. அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் ராஜபக்ஷர்களின் குடும்பத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் செயற்படாமல் தம்மை தெரிவு செய்த மக்களின் அபிலாஷைக்கமைய செயற்பட வேண்டும். பொதுஜன பெரமுனவின் ஒருசில உறுப்பினர்கள் இன்றும் ராஜபக்ஷர்களை பாதுகாக்கும் நோக்குடன் செயற்படுவது ஆச்சரியமாகவுள்ளது. – என்றார்.

# ஜனாதிபதிப் பதவிக்காக ரணில் அரசமைப்புச் சதி; தடுத்துநிறுத்த ஐந்து யோசனைகள் முன்வைப்பு

ஜனாதிபதி பதவியை தக்கவைத்துக்கொள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புச் சதியில் ஈடுபட்டுள்ளார் எனக் கலாநிதி தயான் ஜயத்திலக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சதியை வெற்றி கொள்ளாதபட்சத்தில் ராஜபக்ஷக்களை ஆட்சியிலிருந்து அகற்றும் போராட்டம் தோல்வியடைந்து விட்டதாகவே கொள்ள வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் ரணிலின் ஜனாதிபதி பதவிக்கான அரசமைப்புச் சதியை எவ்வாறு முறியடிக்கலாம் என்பது தொடர்பில் எதிர்க்கட்சிகளும் ராஜபக்ஷவுக்கு எதிரான சக்திகளும் தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிரணிகள் தமக்குள் பிளவுபட்டு நிற்பதால் ராஜபக்ஷக்களின் அரசியல் ஆதிக்கம் தொடரும் ஆபத்துள்ளதாகவும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

இந்நிலையில் ரணிலின் சதியை முறியடிப்பதற்கான ஐந்து யோசனைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவை வருமாறு –

முதலாவதாக பொதுஜனபெரமுனவின் வாக்குகளை ரணிலிடமிருந்து நீக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

இரண்டாவதாக பொதுஜனபெரமுனவைப் பிளவுபடுத்தி ராஜபக்ஷக்களையும் ரணிலை ஆதரிக்கும் ராஜபக்ஷ சார்பு பிரிவையும் தனிமைப்படுத்தல்.

மூன்றாவதாக, டலஸ் அழகப்பெரும போன்ற பொதுஜனபெரமுனவில் கருத்து வேறுபாடுள்ள ஆளுமைகளை ஆதரித்தல்.

நான்காவதாக ரணிலின் வேட்புமனுவைச் சுற்றி எதிர்ப்புடன் உள்ள அனைத்து ஜனநாயக சக்திகளையும் இணைத்தல்.

ஐந்தாவதாக ரணிலுக்கு ஆதரவான பொதுஜன பெரமுன கட்சியை ஒன்றிணையவிடாது தந்திரோபாய வாக்களிப்பு முறையை பின்பற்றல் என்பன அவையாகும்.

# அரசியல் ஸ்திரத்தன்மை மிகவும் அவசியம்

## மீள வலியுறுத்திய மத்திய வங்கி ஆளுநர்!



2022 இல் இலங்கையின் பொருளாதாரம் ஆறு வீதத்தால் வீழ்ச்சியடையும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க வோல்ஸ்ட்ரீட் ஜேர்னலிற்கு தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல் ஸ்திரமின்மை சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுகளைப் பாதித்துள்ளதால் பொருளாதார வீழ்ச்சி ஆறு வீதத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

முக்கிய கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பாக சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுகளை மேற்கொள்வதற்கு நாட்டுக்கு ஸ்திரமான அரசியல் நிர்வாகம் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர் அத்தியாவசிய இறக்குமதிகளான மருந்துகள் எரிபொருள்கள் போன்றவற்றைப் பெறுவதற்காக ஏனைய நாடுகளில் இருந்தும் சர்வதேச அமைப்புகளிடமிருந்தும் நிதி உதவியைப் பெறுவதற்கும் ஸ்திரமான அரசியல் நிர்வாகம் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட 50 கோடி டொலர் நீடிப்பு கிடைக்காதது எரிபொருள் நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளது.

அதேபோன்று இந்தியாவின் ரிசேர்வ் வங்கியுடன் எதிர்பார்க்கப்பட்ட 10 லட்சம் டொலர் நாணய இடமாற்றத்திலும் முன்னேற்றம் ஏற்படவில்லை. அதேபோன்று தனது 150 கோடி டொலர் நாணய இடமாற்ற விடயத்தில் சீனா தனது நிபந்தனைகளைத் தளர்த்தவில்லை என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஒரு வருடகாலத்துக்கு முன்னதாகவே இலங்கை சர்வதேச நாணயநிதியத்தை நாடியிருந்தால் கையில் 400 கோடி டொலர்கள் இருந்தவேளை கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தால் அது இலங்கை இன்றும் அத்தியாவசிய பொருள்களைத் தடையின்றி இறக்குமதி செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதனால் நாடு அமைதியாக இயங்கிக்கொண்டிருக்கும் நிலையும் பொதுமக்கள் மீது நிதி அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் நிலையும் ஏற்பட்டிருக்காது. ஆனால் அரசாங்கம் பொறுத்திருந்து பார்க்க தீர்மானித்தது என அவர் தெரிவித்துள்ளார்.

# மருத்துவ சமூகத்தை இழிவுபடுத்த முயல்கின்றமை மருத்துவர்களை இங்கிருந்து புலம்பெயர வைக்கும்

## மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவிப்பு

கடினமான காலத்தில் பொதுவெளியில் மருத்துவச் சமூகத்தை இழிவுபடுத்த முயல்வது பல மருத்துவர்களை இங்கிருந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர வைத்துவிடுமென யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா தெரிவித்தார்.

இக்கட்டான சூழ்நிலையில் மருத்துவச் சமூகத்துக்கான ஆதரவு எனும் தலைப்பில் மருத்துவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் –

எரிபொருள்களைப் பெறுவதற்காக சாதாரண பொதுமக்களுடன் மருத்துவச் சமூகமும் பாரிய நெருக்கடியை எதிர்கொள்கின்றது.

இந்நிலையில் பாரிய கடமைப் பளுவின் மத்தியிலும் எரிபொருள்களைப்பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க அதிபரின் அனுமதியுடனான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட வைத்தியசாலை சமூகத்தினருக்கு எரிபொருள் நிரப்புவதற்கு சிலர் இடையூறாக இருந்தமையும் சமூக ஊடகங்களில் அவதூறாகவும் கருத்துக்களை உருவாக்குவதும் மிகவும் வேதனைக்குரியது.

வடபகுதியில் 1983 ஆம் ஆண்டுகால அளவில் பல மருத்துவர்களும் மருத்துவ நிபுணர்களும் நாட்டுப்பிரச்சினை காரணமாக புலம்பெயர்ந்தனர்.

மிகவும் கடினமான முயற்சிகளின் பயனாகவே



தற்போது யாழ் போதனா வைத்தியசாலை இலங்கையில் மிகவும் சிறந்த மருத்துவ நிபுணர்களுடன் சேவையினை ஆற்றிவருகின்றது.

மிகவும் கடினமான இக்காலத்தில் பொதுவெளியில் மருத்துவச் சமூகத்தை இழிவுபடுத்த முயல்கின்றமை பல மருத்துவர்களை இங்கிருந்து புலம்பெயர வைத்துவிடும்.

இதனால் பாரிய சமூக வெற்றிடம் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது போன்று ஏற்படலாம். எனவே, மருத்துவ சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்தக் கடினமான சூழலில் மருத்துவச் சமூகத்துக்கு ஆதரவு அளியுங்கள் என்றுள்ளது.

# தமிழ்த் தலைமைகள் மிக நிதானமாகச் செயல்படல் வேண்டும் தவறின் கோட்டா நிலை உங்களுக்கும் எதிர்காலத்தில் வரும்!

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் எச்சரிக்கை

(மன்னார் நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற சூழலை மிகவும் நிதானமாகவும் பொறுமையுடனும் பொறுப்புடனும் தமிழ்த் தலைமைகள் கையாள வேண்டும் எனத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

– இந்த விடயம் தொடர்பாகத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

மேற்படி அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய வழிகளை எட்டுவதற்கு இந்த இக்கட்டான சூழ்நிலையை எமக்கு சாதகமாகப் பயன்படுத்த வேண்டும். இது தான் தமிழ்த் தலைமைகளின் புத்திசாதுர்யமான அறிவார்ந்த அணுகுமுறை ஆகும்.

கடுமையான பொருளாதார நெருக்கடி நிலையில் கூட தமிழ்க் கட்சிகள் தற்சார்பு பொருளாதார முறையை மேற்கொள்ள தமிழ் மக்களை ஊக்குவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியலை முன்னெடுக்காமல் அரசியல் மயப்படுத்தப்பட்ட வெறும் வாக்காளர்களாகவே தமிழ் மக்களை தமிழ் கட்சிகள் நோக்குகின்றன. இதனால் இடைவெளி அதிகமாகின்றது.

தென்னிலங்கையில் நடைபெறும் 'கோட்டா கோ கம' போராட்டம் ஒரு தொலைநோக்கு சித்தாந்த போராட்டம் அல்ல.

அந்த போராட்டக்காரர்களால் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை புரிந்து கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ, தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த போராட்ட பின்னணியில் அரசியல் கட்சிகளான ஜே.வி.பி., முன்னிலை சோசலிச கட்சி, சில அரசியல் வாதிகள், அமைப்புக்கள், ஒரு சில சிங்கள சிவில் அமைப்புகள் காணப்படுகின்றன.

எனவே நெறிமுறை ஒழுங்குகூட போராட்டத்தில் பின்பற்றப்படவில்லை.

இவர்களால் கைப்பற்றப்பட்ட அலுவலகங்களில் நடந்து கொண்ட முறை யாவரையும் விசனத்திற்குட்படுத்தியது.

எனவே இதில் உள்ள அரசியல் கட்சிகள் தமது விருப்பை நிறைவேற்றுவதில் இலக்காக உள்ளனர்.

குறிப்பாக ஜே.வி.பி.தான் இந்த நாட்டில் தமிழருக்கு எதிராக மிகப்பெரிய அளவில் இனவாதத்தைத் தூண்டி, வடக்குக் கிழக்கை பிரித்து, சுனாமி கட்டமைப்பை முடக்கி, பல சூழ்ச்சிகளை எமக்கு எதிராக மேற்கொண்டவர்கள். இவர்கள் தமிழ் மக்களுக்கு மிக ஆபத்தானவர்கள்.

இவர்களது சிந்தனையை நாம் ஆதரிக்கலாமா?

எமது இனத்துக்கு எதிரான அரசியலை மேற்கொள்வதை விடுத்து 'கோட்டா கோ கம'வை கூட்டமைப்பு ஆதரிப்பது முற்றிலும் அரசியல் முதிர்ச்சியற்ற செயலாகும். தேர்தல் அரசியலில் எவரும் உத்தமர்கள் அல்லர்.

தற்போதைய அரசியலில் எவரும் காமராஜர்கள் அல்லர். அரசியல் என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்ற மாக்கியவல்லியின் கூற்று முற்றிலும் சரியானது. அதை அனைவரும் அவ்வப்போது நிரூபித்து வருகிறார்கள். ஜனநாயகம் என்பது லெனின் கும்பல் ஆட்சி என்றால் நாடாளுமன்றம் பன்றிகளின் தொழுவம் என்றான்.

ஆகவே, ஆட்சி தத்துவ முறைமைகள் எல்லாம் கேலிக்கூத்தானவையே. இதில் நல்ல ஜனநாயகம், கெட்ட ஜனநாயகம், நல்லவர், கெட்டவர், என்ற எந்த விளக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை.

பொருள்முதல்வாதம் பதவி முதல் வாதமே. அரசியலின் மூலதனம் இதில் நீதி நியாயம் எல்லாம் வெறும் வார்த்தைகளே.

இனவாதமும் பௌத்த தேசியவாதமும், யுத்த வெறிவாதமும் தான் சிங்கள ஆட்சியாளர்களின் தாரக மந்திரம். அதனால் தான் சிங்கள பௌத்த ஆட்சியை எவராலும் அழிக்க முடியாது என்றார் கோட்டா கோ கம போராட்ட பிரதானிகளில் ஒருவரான ஓமல்பே சோபித தேரர்.

ஆகவே இந்தப் போராட்டத்தை ஆதரிக்கும் கூட்டமைப்பு, தேரரை கண்டிக்காமல் அமைதியாக இருக்கிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இனப்படுகொலையாளி. அவரை அரசியலில் இருந்து அகற்றுவது மட்டுமல்ல சிறைக்கு அனுப்ப வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எனவே பலராலும் நிராகரித்த 13 ஆம் சரத்தை அமுல்படுத்தக் கோரி இந்தியாவுக்கு கடிதம் எழுதி பெரு நாடகம் நடத்திய தமிழ் கட்சிகள் இந்த இக்கட்டான சூழலைத் தமிழ் மக்களுக்கு சாதகமாக பயன்படுத்தாமல் அமைதி காப்பதும் தென்னிலங்கை அரசியலில் ஈடுபடுவதும் வேடிக்கையாக உள்ளது.

'கோட்டா கோ கம' போராட்டம் ஓர் அறிவுபூர்வமான போராட்டம் இல்லை. அது வெறும் தலைமையற்ற அத்தியாவசிய தேவைக்கான உணர்ச்சிகரமான அரசியல் கட்சிகளின் விருப்பு வெறுப்பு போராட்டம்.

இதை தமிழ் மக்கள் ஆதரிப்பதிலோ, எதிர்ப்பதிலோ எந்த பயனும் இல்லை. அதைக் கண்டுகொள்ளவே தேவையில்லை. அது அவர்களின் பிரச்சினை.

ஆகவே கடந்த 13 ஆண்டுகள் தமிழ்க் கட்சிகள் எந்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தாமல் ஆக்கபூர்வமாகச் சிந்தித்து செயலாற்றவில்லை எனும் பொதுவான குற்றச்சாட்டை மறுக்கமுடியாத உண்மை என நிரூபித்து வருகிறார்கள்.

எனவே இனியாவது உங்களுக்குள் ஐக்கியப்பட்டு தூரநோக்கோடு தமிழ் மக்களின் விடுதலை அரசியல் இலக்கை அடைவதற்கு செயலாற்ற வேண்டும். இல்லையேல், கோட்டாவின் நிலை தமிழ் அரசியல் வாதிகளுக்கும் எதிர்காலத்தில் ஏற்படலாம். தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். – என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 50 கண்ணீர் புகை குண்டுகளுடன் பத்திரமுல்லையில் ஒருவர் கைது!

*பத்தரமுல்லை, பொல்துவ சந்திக்கு அருகில் ஜூலை மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றை தாக்கி அவர்களிடமிருந்து 50 கண்ணீர் புகை குண்டுகளை திருடிச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.*

*சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ கருத்து தெரிவிக்கையில் -*

*பொல்துவ சந்திக்கு அருகில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் குழுவொன்று ஓட்டோவில் 50 கண்ணீர் புகை குண்டுகளை ஏற்றிச் சென்ற போது ஓட்டோவை வழி மறித்து பொலிஸ் அதிகாரிகளை தாக்கி அவர்களிடமிருந்து 50 கண்ணீர்புகைகுண்டுகள் போராட்டக்காரர்களால் திருடப்பட்டன.*

*இந்நிலையில், மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒபேசேகர, புர நாணயக்கார மாவத்தையில் வைத்து வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மேலும், பொரளை, கோதமி பிரதேசத்தில் தற்காலிகமாக தங்கியிருப்பவர் என்றும் அவரது தங்குமிட அறையில் 50 கண்ணீர் புகை குண்டுகளை மறைத்து வைத்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.*

*கைது செய்யப்பட்டவர் 31 வயதுடைய பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் சந்தேகநபரை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.*

*வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

# முஸ்லிம்களின் பிரச்சினையை தீர்க்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்!

## அல் – மீஸான் பவுண்டேஷன் ஸ்ரீலங்கா தமது எம்.பிக்களுக்கு கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளை சேர்ந்த எல்லா முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கட்சிகளின் விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தும் சக்தியும், ஆளுமையும், எண்ணமும் கொண்ட ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க முன்வர வேண்டும் என சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அல் – மீஸான் பவுண்டேஷன் ஸ்ரீலங்கா வேண்டுகோளொன்றைவிடுத்துள்ளது. அல்-மீஸான்பவுண்டேஷன் ஸ்ரீலங்கா விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி போன்ற தமிழ் மக்களின் சக்திமிக்க அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் வேட்பாளர்களுடன் பேச்சுகள் செய்துவரும் நிலையில் முஸ்லிம் கட்சிகள் வழமை போன்று கண்களை மூடிக் கொண்டு வாசிக்கு வலைவீசாமல் நிதானித்து முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர ஆராய்ந்து முடிவெடுக்க சிறந்த வாய்ப்பு கிட்டியுள்ளதாக இந்த சூழ்நிலையை அடிக்கோடிட்டு காட்ட விரும்புகிறோம்.

முஸ்லிம் சமூகத்தின் காணி மற்றும் நிலப்பிரச்சினைகள், பிராந்திய பிரச்சினைகள், உரிமை சார்ந்த விடயங்கள் என இலங்கையின் சகல பாகங்களிலும் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைப் பட்டியலிட்டு அந்தப் பிரச்சினைகளை எழுத்து மூலம் ஒப்பந்தம்செய்துவெற்றிபெறுவதற்குவாய்ப்பிருக்கின்ற, முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் ஆற்றலும், எண்ணமும் உள்ள வேட்பாளர்களை அணுகி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கடந்த காலங்களில் விட்ட தவறுகளை முன்னுதாரணமாகக் கொண்டு இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறோம் எனத் தெரிவித்துள்ளது.

# இலங்கை தொடர்பான சர்வகட்சி கூட்டத்திற்கு இந்திய அரசு அழைப்பு

இலங்கை தொடர்பான அனைத்து கட்சி கூட்டத்திற்கு இந்திய அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இன்று (செவ்வாய்க்கிழமை) இலங்கைநெருக்கடி தொடர்பான அனைத்துகட்சி கூட்டத்துக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது என நாடாளுமன்ற விவகார அமைச்சர் பிரஹ்லாட் ஜோசி தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன், வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தலைமையில் இந்த கூட்டம் இடம்பெறவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகளுக்கு முன்னதாக இடம்பெற்ற சம்பிரதாயப்பூர்வமான அனைத்து கட்சி கூட்டத்தின் பின்னரே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு இந்தியா தலையிட வேண்டும் எனதி.மு.கவும் அ.தி.மு.கவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இரு கட்சிகள் இலங்கை நிலைவரம் தொடர்பாகக் குறிப்பாக தமிழர் நிலைமை தொடர்பாகக் கரிசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-66

**பேரினவாதத்தின் சாணக்கியங்கள்**

கோட்டா நாட்டை விட்டுப் பறந்த பின் நடந்த அசம்பாவிதங்களால் போராட்டம் வன்முறையாகிறது, ராஜபக்ஷக்களை விரட்டுவதற்காக ஒன்று சேர்ந்த மக்களின் எழுச்சி திசை திருப்பப்பட்டு, மக்கள் ஏற்றுக் கொள்ளாத கட்சிகள், அமைப்புகள் அதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றன என்ற எதிர்ப்பு பேரின மக்களிடமிருந்து பலமாகவே வந்தது. இந்த அழுத்தங்களாலும், போராட்டக்காரர்களுக்கு பின்புலத்திலிருந்து அரசியல் கட்சிகளினதும், சர்வதேசத்தினதும் கோரிக்கைகளாலும் போராட்டக்காரர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்த கட்டடங்களை இராணுவத்தினரிடம் மீளக் கையளித்து, நாடாளுமன்றத்தைநோக்கிய முனைப்பையும் நிறுத்தி, தற்போது அமுலில் இருக்கும் அரசமைப்பு வரைமுறைகளின் கீழ் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் முறைமையை ஏற்றுக் கொண்டு, தாங்கள் திணித்த எல்லாக் கட்சிகளும் சேர்ந்து இயங்கும் தேசிய அரசையும் கைவிட்டு விலகினர். போராட்டக்காரர்களுக்கு திசை திருப்புதல் நடந்தால், தற்போது இருக்கும் பேரின மக்களின் கட்டுப்பாடுகள் நிலை குலைந்து நாடு மேலும் சீரழிந்து விடலாம், முதலில் அதிகாரத்தைப் பெரும்பான்மையின் கையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆதங்கங்கள் வெளிப்படுத்தப்பட்டமையையுடன் எல்லாவற்றிலும் முக்கியம் பொருளாதார சீரழிவில் இருந்து நாட்டை மீட்டுக் கொள்வதே என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

பின்னின்ற சர்வதேசங்கள், மெதுவாக வன்முறை வெடித்து, ஜனநாயகத்தைக் கவிழ்க சதி நடக்குமானால், பொலிஸ் – இராணுவம் எடுக்கும் நடவடிக்கைகள் கலவரங்களையும் சட்ட மீறல்களையும் கட்டுப்படுத்துவதற்கு எடுத்தவையாகக் கருதப்படும், பாரதூரமான மனித உரிமை மீறலாக அவை கணிக்கப்பட மாட்டா என்பதும் காதுகளில் சொல்லப்பட்டன. அதனால் போராட்டக்காரர்களின் பல தலைமைகள் பொறுத்திருந்து பார்க்கும் பாதையை அனுசரிக்கின்றன.

ஜனாதிபதிப் பதவிக்கு நடக்கும் போட்டிகளில் யார் பொருளாதாரத்தை மீட்பதற்கு அனுபவம் வாய்ந்தவர் என்பதெல்லாம் பின் தள்ளப்பட்டு, கட்சி அரசியலும் அவற்றில் இருந்த பேரினவாதங்களும் தான் போட்டியிடுபவருக்கு ஆதரவு கரங்கள் தரப்போகின்றன. வெல்லுபவர் மந்திரி சபை அமைத்து, அவர்களின் கடமைகளில் நாட்டின் திட்டங்கள் முன்னேறும். அங்கு நாட்டின் பாரிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான தேசிய நோக்கு அடிபட்டு போகும். பழையபடி அதிகாரம் யார் கையில் என்ற அரசியல்தான் தொடரும்.

நாடு பெரும்பான்மையினரின் கட்சி நலன்களுக்கான அரசியலில் அகப்படுவதால், தமிழ் மக்கள் அதற்குள் நீச்சல் அடிக்காமல் விலகி நின்று, தங்களுக்கு எனத் தற்போதைக்கு இருப்பவற்றைப் பாதுகாத்து, காரிய சித்தியாக்கி, அதி



லிருந்து மேலும் அவர்களுக்கு உரியதென இனம் காணப்பட்டவைகளையும் பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இப்பொழுது பொருளாதார மீட்சியைப் பார்ப்போம், அதற்கு எல்லோர் உதவிகளும் தேவை, பின் புதிய அரசமைப்பு மூலம் சமஷ்டிக் கட்டமைப்பையோ, அதிகாரப் பரவலையோ பார்க்கலாம். அல்லது அவற்றுக்கு நிறைவேற்று அதிகார முறைகள் மாற்றப்பட வேண்டும், அதற்காக அரசமைப்பு உடனடியாக மாற்ற வேண்டும் என தங்கள் பெரும்பான்மையில் 13 ஆவது திருத்தம் யாவும் பேரினவாதத்தால் அகற்றப்படலாம். தமிழ் பிரதிநிதிகளின் நாடாளுமன்ற பலத்தால் அதனை தடுக்க முடியாது. கூக்குரல் போட்டும் பயன் கிடைக்கப் போவதில்லை. விரலுக்கேற்ற வீக்கமாகத்தான் இருக்கும். இவற்றில் தமிழ் மக்கள் விழிப்புடன் தங்களது அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்.

இந்தத் தொடரில் சில நாள்களுக்கு முன் வந்த பதிவில் ராஜபக்ஷக்களுக்கு ரணிலுடன் இருந்த ‘டீல்’ பற்றிப் பிரஸ்தாபித்திருந்தேன். ரணில் தனக்கு இருக்கும் சர்வதேச நட்புகளைப் பாவித்து, அவர்களுக்கு முதலில் சர்வதேச குற்ற நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பு பெற்றுதருவதும், நாடு எதிர்கொள்ளப் போகும் பொருளாதாரப் பிரச்சினைகளில் கைகொடுப்பதும் இலக்கு என்று குறிப்பிட்டிருந்தேன். ‘கோட்டா கோ கம’ எழுவதற்கு முன்னரே இந்த டீலிங்கிற்கான அத்திபாரங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

மஹிந்த பதவி விலகி, அது கோட்டாவுக்கும் தொடர்ந்த போதும், அவர் ரணிலைப் பிரதமராக்கிய போதும், மாலைதீவு பழைய ஜனாதிபதியிடம் உதவிகள் பெற்று கோட்டாவுக்கு பாதுகாப்பான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட பின், கோட்டா பதவியை துறப்பார், அதன் தொடர்ச்சியாக ரணில் அரசியல் சட்டப்படி ஜனாதிபதி ஆவார் என்பவை அதன் பின்னான நிகழ்வுகள். அவை இந்த டீலை தெளிவுபடுத்துகின்றன.

தமிழர் புலம்பெயர் சமூகத்தின் பரப்புகள் சில, தங்களது பிரசாரங்களின் தாக்குதலால்தான் கோட்டாவுக்கு இந்த நிலை வந்தது என மார்தட்டிக் கொள்கின்றன. அவர்களது பிரசாரம் உதவியாய் இருக்கிறது என்றாலும், சிங்கள மக்களிடையே அவை எந்தத் தாக்கத்தையும் தரவில்லை. மிகப் பெரும்பான்மையால் ஜனாதிபதியாகத் தேர்வாகி வந்த கோட்டாபய, பதவியை விட்டு ஓடி இருக்கின்றமை தமிழருடைய போராட்டத்தைப் பொறுத்தவரை ‘காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த கதை’தான். அவரை விரட்டி வெளியேற்றியவர்கள் சிங்கள மக்கள். அவர்களின் பெரும்பகுதி தமிழினத்திற்கு எதிரான இனப்படுகொலை என்ற அடிப்படையில் அவரைத் துரத்தவில்லை. ராஜபக்ஷக்கள் நாட்டை உறிஞ்சி நாசம் செய்தார்கள், தங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்தார்கள் என்ற கோபங்களின் கிளர்ச்சியே அதற்குக் காரணம்.

கோட்டா தற்பொழுது ரணிலிடம் தனக்கு சர்வதேசத்தில் பாதுகாப்பு தேடும் பொறுப்புக்களை விட்டு வெளியேறி உள்ளார். சர்வதேசமும் கோட்டாவினது மட்டுமல்ல, ராஜபக்ஷக்களின் ஊழல்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் நீதி தேவை எனக் குரல் எழுப்புகின்றன. சாதுரியமான, யதார்த்தமான முன்னெடுப்புகள் புலம்பெயர் மக்களுக்கு இங்குதான் உண்டு.

நாடும் சிங்கள மக்களும் ஓர் இக்கட்டான – செங்குத்தான – சரிவில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஜூலை 20ஆம் திகதி (நாளை) ஜனாதிபதி தேர்தலின் பின் யார் தேர்வு செய்யப்படுவார் என்பது பல முனை போட்டிகளால் குழப்ப நிலையில் உள்ளது. ஆனால் தான் தன்னை நியமிப்பேன், வெல்லுவேன் என ரணில் உறுதியான நம்பிக்கைகளில் கருமமாற்றுகின்றார். நாட்டின் கர்மமே இவர்களை நடத்துகிறது.

அரசாங்கத்துக்கு மொட்டு கட்சியினராகக் கடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் – ஜனாதிபதி உட்பட – மக்களின் ஆதரவை முற்றாக இழந்திருக்கின்றனர். அதே தேர்தலில் ரணில் தானும் தோற்று, தனது கட்சிக்கும் கூட மக்களிடமிருந்து ஓர் அங்கத்தினரைக் கூட மாவட்ட ரீதியில் பெற்றுக் கொள்ளாதவரானார். ஆனால், டீல்களால் இன்று பிரதமராகி, தற்காலிக ஜனாதிபதியாகவும் அமர்ந்து விட்டார். ஆக, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அது மக்கள் ஆதரவு இழந்த ஓர் அரசியல் கூட்டம், மக்கள ஆதரவை தராத ஒருவரைத் தங்களது சுயநலங்களைப் பாதுகாக்க நியமித்து வெற்றி பெறச் செய்யும் நடவடிக்கையாக அது அமையும். தார்மீகமும் மனசாட்சியுமற்ற செயலும் கூட.

ஆனால் ரணிலும் பேரினவாதமும் நாட்டின் எதிர்காலத்தை முன்வைத்து, இராணுவக் கட்டமைப்பைக் காட்டி, காலிமுகத்திடல் போராளிகளையும், எதிர் கட்சிகளையும் மடக்கி, அரசமைப்புச் சட்டங்களுக்கு அமையவே புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி, அந்தப் பாதையில் பயணமும் நடக்கிறது. ஆக, ரணில் வென்றால் அதற்கு சட்டபூர்வமான தன்மை உண்டு. மக்களின் ஆதரவும் மதிப்பும் இழந்த ஒருவர் சட்டபூர்வமான தன்மை கொண்டவர் என்ற நியதியில் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதனைக் காலிமுகத் திடல் போராளிகளும் பொதுமக்களும் ஏற்றுக் கொள்ளப்போகிறார்களா? பழையபடி அவர்கள் ரணிலுக்கு எதிரான புரட்சிகளைச் செய்வார்களா? அவை புரட்சிப் பாதையில் பயணிக்குமா? – என்ற கேள்விகள் உண்டு. இவற்றிற்கு பின் இருந்த சர்வதேச நாடுகளும், ‘குவாட்’ அங்கத்தினர்களும் தேர்வில் சட்டபூர்வமான தன்மைகள் இருந்தால் அதனை நியாயப்படுத்துவார்கள். ஏனெனில் ரணில் ஜனாதிபதியாக இருப்பது அவர்களது புவியியல் அரசியலுக்கு ஒத்தாசையாக இருக்கும் – சஜித்தையோ அனுராவையோ விட.

மாறி, செங்குத்துச் சரிவின் மறுபுறம் விழுந்து, ரணில் இல்லாத மற்றொருவர் தேர்வு செய்யப்பட்டால், சர்வதேசங்களுக்கும் இவற்றின் பின்னணியில் இருந்தவர்களுக்கும் புதிய பாதைகளைத் தேட வேண்டி வரும். அதில் ரணில் பதவியை விடாது வேறு வழி நாடுவாரா என்பதும் கேள்வியே.

ஆகவே தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களும் கத்தி முனையில் நடப்பவர்களாக காரியமாற்ற வேண்டி இருக்கிறார்கள். ஆனால் இவற்றை எழுதும் போது கூட, அவர்கள் ஒருமைப்பாட்டுக்கு வந்தவர்களாகத் தெரியவில்லை.

(வளரும்)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=